பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஐப்பசி 11 செவ்வாய்க்கிழமை (27-10-1992) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 334

# மன்னாரில் புலிகள் தாக்குதல்

# 10 காவலரண்கள் வீழ்ச்சி!

## படையினர் தரப்பில் 10 பேர் பலி

யாழ்ப்பாணம், அக்டோபர் 27

மன்னாரில் விடுதலைப் புலிகள் நேற்று அதிகாலை அதிரடித் தாக்குதல் ஒன்றை நடத்தி ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் 10 காவலரண்களையும், அவர்கள் வசமிருந்த வீடு ஒன்றையும் கைப்பற்றினர்.

இந்தத் தாக்குதலின்போது 10 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். ஆர். பி. ஜி. துப்பாக்கி உட்பட பெருமளவு ஆயுத தளபாடங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

மன்னார் மாவட்டத்தில் உயிலங்குளத்துக்கும், சரம் பைக்குளத்துக்கும் இடையில் உள்ள காவலரண்களே நேற்று அதிகாலை விடுதலைப் புலிகளிடம் வீழ்ச்சி அடைந்தன.

நேற்று அதிகாலை 2.15 மணியளவில் ஆரம்பிக்கப்பட்ட தாக்குதல் 30 நிமிட நேரம் நீடித்தது.

காவலரண்கள் மீது விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்திக் கொண்டிருந்த சமயம் இராணுவத்தினரின் உதவிக்கென அடம்பன், உயிலங்குளம் ஆகிய இரு இடங்களில் இருந்தும் 'பவள்' கவசவாகனங்கள் சகிதம் முன்னேறி வந்த இராணுவ அணிகளும் புலிகளின் மற்றொரு அணியினால் தாக்கி விரட்டப்பட்டன.

தாக்கி விரட்டப்பட்ட இராணுவத்தினர் தரப்பிலும் பலத்த சேதங்கள் ஏற்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

அதே சமயம், மன்னாரில்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

யாழ்ப்பாணம், அக். 27

மன்னாரில் நேற்று நடந்த அதிரடித் தாக்குதலின் போது விடுதலைப் புலிகள் கைப்பற்றிய ஆயுதங்களின் விபரம் வருமாறு:-

| | | |
|---|---|---|
| ★ ஆர். பி. ஜி | — | 01 |
| ★ அதற்குரிய ஷெல்கள் | — | 03 |
| ★ அதற்குரிய பிறப்புளர்கள் | — | 03 |
| ★ ஏ. கே. எல். எம். ஜி | — | 01 |
| ★ அதற்குரிய ரவைக்கூடுகள் | — | 04 |
| ★ தொடர் ரவைகள் | — | 450 |
| ★ ரி - 81 ரக துப்பாக்கிகள் | — | 08 |
| ★ அதற்குரிய ரவைக்கூடுகள் | — | 51 |
| ★ ரி - 56 ரக ரவைக்கூடுகள் | — | 06 |
| ★ ஜி - 3 ரக ரவைக்கூடு | — | 01 |
| ★ நடுத்தர ரவைகள் | — | 8485 |
| ★ ஜே. ஆர். கைக் குண்டுகள் | — | 05 |
| ★ புகைக் குண்டுகள் | — | 02 |
| ★ ரேட்டோ ரவைகள் | — | 81 |
| ★ நடுத்தர கால் ரவைகள் | — | 07 |

[6 ஆம் பக்கம் பார்க்க]

## 3 போராளிகள் வீரமரணம்

மன்னாரில் நேற்று நடந்த அதிரடித் தாக்குதலில் மூன்று போராளிகள் வீரமரணமடைந்தனர்.

லெப்டினன்ட் நிரோஜ் (உதயகுமார் ரஞ்சித் — மட்டக்களப்பு), லெப்டினன்ட் சசிகுமார் (பிலிப்டயஸ் யூலிஸ்டயஸ் — மன்னார்), லெப்டினன்ட் இறையண்ணன் (பேதுரு செபமாலை — மன்னார்) ஆகிய போராளிகளே வீரமரணமடைந்தவர்கள் ஆவர். (இ-3)

## சர்வதேச செஞ்சிலுவை தலைமையக அதிகாரி வருகை

யாழ்ப்பாணம், அக். 27

செஞ்சிலுவைச் சங்கச் சர்வதேசக் குழுவின் ஜெனிவா தலைமையகத்தில் இலங்கை விவகாரங்களுக்குப் பொறுப்பாகக் கடமையாற்றும் அதிகாரி திரு. ஜுனோத் இன்று யாழ்ப்பாணம் வருகிறார்.

பலாலிக்கு விமான மூலம் வந்து சேரும் இவர் 'குமண' கப்பல் மூலமாக பருத்தித்துறைக்கு இன்று காலை வந்து சேர்வார்.

இரு தினங்கள் யாழ்ப்பாணத்தில் தங்கி நிற்கும் திரு. ஜுனோத் யாழ். ஆஸ்பத்திரி பாதுகாப்பு வலயம், செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவால் மேற்பார்வை செய்யப்படும் அகதி முகாம்கள், பருத்தித்துறை இறங்குதுறை ஆகியவற்றுக்கு விஜயம்செய்து நடைமுறைச் சிக்கல்கள் குறித்து ஆராய்வார்.

யாழ்ப்பாணத்தில் முக்கிய பிரமுகர்களையும் இவர் சந்தித்து உரையாடுவார்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## குமாரியில் மா வரும்

யாழ்ப்பாணம், அக். 27

நாளை பருத்தித்துறைக்கு வந்து சேரும் 'குமாரி' கப்பல் திருகோணமலை சென்று 3 ஆயிரம் மெற்றிக் தொன் மாவை ஏற்றி வரவிருக்கிறது.

இக் கப்பல் திருகோணமலை செல்லும் போது அரச அதிகாரிகள் இலரும் செல்ல

(6 ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப் புலிகளிடம் நீர்மூழ்கிக் கப்பல்!

### வெரித்தாஸ் வானொலி தகவல்

கொழும்பு, அக். 27

கடற்படைக் கப்பல்கள் மீது தாக்குதல் நடத்தக் கூடிய சிறிய நீர்மூழ்கிக் கப்பல் ஒன்றை விடுதலைப் புலிகள் தயாரித்துள்ளனர் என்று செய்திகள் வெளிவந்துள்ளன.

இராணுவ புலனாய்வு வட்டாரங்களை மேற்கோள் காட்டி இச்செய்தியை வெரித்தாஸ் வானொலி அறிவித்தது.

விடுதலைப் புலிகள் இந்த நீர்மூழ்கிக் கப்பலை வெள்ளோட்டம் பார்த்திருப்பதாகவும் இராணுவ வட்டாரங்களை ஆதாரம் காட்டி கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடற்படையினர் வடக்கு, கிழக்கில் ரோந்துச் சேவையை தீவிரப்படுத்தியிருப்பதால் அவர்களின் ராடார் கருவிகளை நாசம் செய்ய புலிகள் திட்டமிட்டுள்ளனர் என்றும்—

இதுவரையில் கடற்படையினரின் ராடார் கப்பலைத் தகர்ப்பதற்கு வெடிமருந்து நிரப்பப்பட்ட இரு படகுகளைக் கொண்டு வந்து மோதும் முயற்சியில் கடற்புலிகளின் தற்கொலைப் படையினர் இருதடவை முயற்சி செய்தனர் என்றும் —

இச் சந்தர்ப்பங்களில் பெருமளவு இராணுவத்தினர் கொல்லப்பட்டதோடு இரு கப்பல்களும் சேதமடைந்தன

(6 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். பல்கலை புதிய மாணவருக்கு வகுப்பு ஆரம்பமாகு முன்னரே 'ராகிங்'

யாழ்ப்பாணம், அக். 27

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்துக்கு புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களை, பல்கலைக்கழக வகுப்புகள் ஆரம்பமாவதற்கு முன்னரே 'ராகிங்' தொல்லைக்கு ஆளாக்கும் சம்பவங்கள் ஆரம்பித்து விட்டன.

இது குறித்து புதிய மாணவர்களின் பெற்றோர்கள் விசனம் தெரிவித்திருக்கின்றனர். "செல்ட்" ஆங்கிலப் பயிற்சிக்குச்செல்லும் மாணவர்களை பல்கலைக்கழக மாணவர்கள் வகுப்புகள் நடைபெறும் பாடசாலைகளிலும், வீதிகளிலும், ஏன் வீடுகளுக்குச் சென்றும் 'ராகிங்' தொல்லைக்கு ஆளாக்குவதாக பெற்றோர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இவற்றுக்குச் சிகரம் வைத்தாற்போல, வைத்திய பீடத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவி ஒருவர் வைத்திய பீட உணவுச்சாலைக்கு கூட்டிச் செல்லப்பட்டு இம்சைப் படுத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது.

பல்கலைக்கழக வட்டாரங்களில் இது தொடர்பாக விசாரித்தபோது குறிப்பிட்ட சம்பவம் குறித்து உரிய முறையில் ஆதாரபூர்வமாக முறைப்பாடு செய்யப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

"ராகிங்" தொல்லைக்கு ஆளாகும் மாணவர்களின் பெற்றோர் சம்பந்தப்பட்டவர்களை இனம் காணக்கூடிய விதத்தில் முறைப்பாடு செய்தால் குற்றமிழைத்தவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பல்கலைக்கழக வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

"ராகிங்" சம்பவங்கள் குறித்து இரண்டு பெற்றோர்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## கிளாலியில் கடற்படை சூடு

தென்மராட்சி, அக். 27

நேற்று முன்தினம் கிளாலி கடலில் கடற்படையினர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் காயம் அடைந்தார்.

இணுவிலைச் சேர்ந்த கே. நவரத்தினம் (வயது 30) என்பவரே காயம் அடைந்தவர் ஆவார்.

காயம் அடைந்தவர் முதலில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு பின்னர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். (இ-117)

## ரோந்து சென்ற படை மீது களுவாஞ்சிக்குடியில் தாக்கு

கொழும்பு, அக். 27

மட்டக்களப்பு மாவட்டம்-களுவாஞ்சிக்குடியில் ரோந்து சென்ற அதிரடிப்படையினர் மீது விடுதலைப் புலிகள் கைக்குண்டுகளை வீசி, துப்பாக்கிகளால் சுட்டனர் என்று கூட்டுப்படைகள் தலைமையகப் பேச்சாளர் நேற்றுத் தெரிவித்தார்.

களுவாஞ்சிக்குடிப் படைப் பிரிவில் இருந்து ரோந்து சென்ற இந்தக் கொமாண்டோக்கள் பதில் தாக்குதல் நடத்தினார்கள் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.

**வனம் வானுயர வளம் தானுயரும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளி உலகத் தொடர்புகளை இழந்த நிலையில் நெடுந்தீவு மக்கள்

## பொருள்களின் விலையும் குறையவில்லை

யாழ்ப்பாணம், அக். 27

விவசாய மற்றும் மீன்பிடித் தொழில் நெடுந்தீவில் பாதிக்கப்பட்டுள்ளன. மக்களிடையே பணப்புழக்கமும் குறைவாகவுள்ளது இலவசதிகள் கிடைத்தபோதிலும் உலகத்தொடர்புகளில் இருந்து தனித்து விடுபட்டுப் போனதான உணர்வு அங்குள்ள மக்களின் நிலையான துயரமாக நீடிக்கிறது.

நெடுந்தீவில் இருந்து பல மாதங்களின் பின்னர் முதல் தடவையாக யாழ்ப்பாணம் வந்த இறிவதவ மதகுரு ஒருவர் இத்தகவலை உதயனுக்குத் தெரிவித்தார்.

அங்குள்ள நிலைமை பற்றி மதகுரு மேலும் தெரிவித்ததாவது:-

நெடுந்தீவில் உள்ள வணக்க ஸ்தலங்களில் பூஜை வழிபாடுகள் நடைபெறுகின்றன. அங்குள்ள ப. நோ. கூ. சங்கம் கொழும்பில் இருந்து தனிப்பட்ட கப்பல் ஒன்றில் உணவுப் பொருள்களை தருவித்து விநியோகிக்கிறது. ஆனால் தடை செய்யப்பட்ட பொருள்கள் அங்கும் கிடைப்பதில்லை.

மண்எண்ணெய் போத்தல் 30 ரூபாவாக விற்கப்படுகிறது. மாதத்தில் ஒரு தடவை அல்லது இரண்டு மாதத்துக்கு ஓர் தடவை ''தாரகா'' என்ற கப்பல் கொழும்பில் இருந்து நெடுந்தீவு வந்துபோகிறது.

நெடுந்தீவு ஆஸ்பத்திரி இயங்குகிறது. இரண்டு வைத்தியர்கள் பணியாற்றுகிறார்கள். அவசர சிகிச்சைக்காக நோயாளிகள் அனுராதபுரத்துக்கும், சிலர் யாழ்ப்பாணத்துக்கும் கொண்டு செல்லப்படுகிறார்கள்.

### விவசாயம் பாதிப்பு

உரவகைகள் கிடைக்காததாலும் நீர் வசதி இன்மையாலும் விவசாய நடவடிக்கைகள் நெடுந்தீவில் பாதிக்கப்பட்டுள்ளன. அதனால் பலர் பண வருவாயை இழந்துள்ளனர்.

குறிப்பிட்ட கடற்பரப்பில் மட்டுமே மீன்பிடிக்க படையினர் அனுமதித்துள்ளனர். தாம் பிடிக்கும் மீன்வகைகளை விற்பதற்கான சந்தை வாய்ப்புகள் இல்லாததால் பல குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

பொதுவாக வெளியிடங்களுடன் தொடர்பற்றிருக்கும் நீண்டநாள் நிலை மக்களை மனரீயல் ரீதியாக பாதித்துள்ளது.

இப்படி அவர் கூறினார்.

[இ-5]

# வயிற்றோட்டத்தை தடுக்கும் வழிகள்

யாழ். மாநகரப் பிரதேசத்தில் வயிற்றோட்ட நோய் தீவிரமாகப் பரவி வருவதை அடுத்து வயிற்றோட்ட நோய் சம்பந்தமான சுகாதாரக் குறிப்பு ஒன்றை யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை நேற்று பத்திரிகைகளுக்கு அனுப்பி வைத்தது. அதன் விபரம் வருமாறு:-

வயிற்றோட்டம் தற்போது பல இடங்களிலும் வேகமாகப் பரவி வருகின்றது என்பதனை சகலரும் மிகுந்த அவதானத்துடன் கருத்திற்கொண்டு செயற்படல் மிகவும் அத்தியாவசியமானதாகும்.

இந்நோயினால் குறிப்பாக சிறுபிள்ளைகள் பலர் மரணமடைந்துள்ளனர். பொது மக்களின் மனப்பூர்வமான ஒத்துழைப்பு இருந்தால் மட்டுமே வயிற்றோட்டத்தினைக் கட்டுப்படுத்தவோ, தடுக்கவோ முடியும்.

வயிற்றோட்டத்தின் காரணி:- வயிற்றோட்டத்தினை உண்டாக்கும் வைரஸ், பக்டீரியா.

தொற்றும் விதம்:- வயிற்றோட்ட நோயாளியின் மலத்தில் உள்ள கிருமிகள், உணவு, நீர் மூலமாக சுகதேகியைச் சென்றடைந்து தாக்கத்தினை ஏற்படுத்துகின்றன.

வயிற்றோட்டம் என்பது, வழமைக்கு மாறாக நீர்த்தன்மையான மலம், மூன்று, நான்கு தடவைக்கு மேல் நாள் ஒன்றுக்கு வெளியேறும் நிலை.

தாக்கம்:- வயிற்றோட்டத்தின்போது உடலில் இருக்கும் நீர், உப்பு வகைகள், சீனிச் சத்து ஆகியவை வெளியேறுவதனால் வரட்சி அதாவது நீர் இழப்பு ஏற்படுவதால் மரணம் சம்பவிக்கலாம்.

தடுப்பு முறைகள்:

★ மலகூடத்தில் மலம் கழியுங்கள். மலகூடம் இல்லாவிடின் பாதுகாப்பான முறையில் மலத்தைப் புதையுங்கள்.

★ மலகூட உபயோகத்தின் பின்னரும், உணவினைக் கையாளும் முன்னரும் கைகளைச் சவர்க்காரம் கொண்டு நன்கு கழுவுங்கள்.

★ கொதித்தாறிய நீரையே பருகுங்கள்.

★ உணவுப் பண்டங்களை கூடியவரையில் சமைத்தவுடனேயே உண்ணுங்கள்.

★ உணவினை, உபகரணங்

(6 ஆம் பக்கம் பார்க்க)


யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

கனிஷ்ட செஞ்சிலுவைச் சங்கம்

★ எமது சங்கத்தின் 4 ஆம் ஆண்டு நிறைவை யொட்டி முதலுதவி எழுத்துப்போட்டி ஒன்றை யாழ். மாவட்ட உயர்தர பாடசாலைகளுக்கிடையில் நடத்தவுள்ளோம்.

★ விண்ணப்பப்படிவங்களுக்கு எம்முடன் தொடர்பு கொள்ளவும்.


★ ஒரு பாடசாலையிலிருந்து எத்தனை பேரும் பங்கு பற்றலாம்.

★ விண்ணப்ப முடிவு தேதி — 30-10-92.

(23038)



5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



கொட்டடியைப் பிறப்பிடமாகவும், நல்லூரை வதிவிடமாகவும் கொண்ட

தருமலிங்கம் கணேசலிங்கம்

(பரக் கட்டுத்தாபனம்)

பிறப்பு: 30 – 08 – 1940

இறப்பு: 24 – 10 – 1987

திதி: 27 - 10 - 1992

என் இனிய புத்திரனாய் தோன்றி, தந்தையின் ஸ்தானத்தில் இருந்து உனை மறந்து கடமையில் திளைத்த என் செல்வமே!

இறைவன் திருப்பதம் அடைந்து ஆண்டு ஐந்து சென்றாலும் உன் நினைவு என்றும் எமை விட்டு அகலாது.

அம்மா, சகோதர, சகோதரிகள்.

(23025)


# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், அக். 27

கோண்டாவில் வடக்கு மத்திய கிராம முன்னேற்றச் சங்கம் 7 பேர் கொண்ட அணிகளுக்கிடையில் விலகல் முறையில் நடத்திவரும் உதைபந்தாட்டப் போட்டித் தொடரில் இன்று மாலை கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவிருக்கும் ஆட்டங்களின் விபரம் வருமாறு:-

★ 3. 30 மணிக்கு திருமலை நட்சத்திர அணி எதிர் கொக்குவில் மத்தி அணி.

★ 4. 30 மணிக்கு றோயல் அணி எதிர் ஈச்சமோட்டை அணி.

[இ]

# தமிழ்நாட்டில் எய்ட்ஸ் தீவிரமாக பரவுகிறது

சென்னை, அக். 27

தமிழ்நாட்டில் எய்ட்ஸ் நோய் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட ஒரு லட்சத்து 88 ஆயிரம் பேரில் ஆயிரத்து 830 பேர் எய்ட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளது தெரியவந்துள்ளது.

இந்தியாவில் 15 லட்சம் பேர் எய்ட்ஸ் சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர், அவர்களில் 11 ஆயிரம் பேர்களில் எய்ட்ஸ் நோய் அறிகுறிகள் காணப்பட்டன.

இத்தகவல்கள் சென்னையில் நேற்று ஆரம்பமான எய்ட்ஸ் தொடர்பான மூன்று நாள் கருத்தரங்கில் வெளியிடப்பட்டன.

இக்கருத்தரங்கை யுனிசெப், உலக சுகாதார ஸ்தாபனம் மற்றும் தமிழக அரசு ஆகியன கூட்டாக ஒழுங்கு செய்துள்ளன.

[இ-எ]


பருத்தித்துறை கோட்டுவாசல்

ஸ்ரீ சண்டிகா பரமேஸ்வரி அம்பாள்

மண்டலாபிஷேக பூர்த்திவிழா

27 - 10 - 92 செவ்வாய் இரவு 8 மணிக்கு

மேளக்கச்சேரி

அருட்பேருரை:- "சிவத்தமிழ் வித்தகர்" சிவ - மகாலிங்கம் B A (விரிவுரையாளர்)

வில்லிசை

"கலைமாமணி" "சித்தாந்த வித்தகர்" S S. சர்மா அவர்களின்

ஸ்ரீதேவி வில்லிசைக் குழுவினர்

விடயம்:- "கதிரவனைத் தடுத்த காரிகை"

மெல்லிசை

"சுளிபுரம் கவிதாலயா" குழுவினர்

அனைவரும் வருக !!

(23035) — உபயகாரர்கள்



உடுவில் மகளிர் கல்லூரி

(தொடர் கல்வி நிலையம்)

வெளிவாரிப் பட்டப் படிப்புகள்

(யாழ்ப்பாண பல்கலைக் கழகம்)

● B. A. (Part I) 2 ஆம் வருடம்

● G. A. Q. புதிய பிரிவு

ஆரம்பம்:- 02 - 11 - 92

எமது விரிவுரையாளர் குழு:-

திரு. S. வரதராஜன் B. A. (Hons)
திரு. N. குழந்தைவேல் B. A (Hons)
திரு. S. S. மனோகரன் B. Com.
திருமதி பவசிங்கம் B. A. (Hons)
திரு. K. செல்வரட்ணம் B. A. (Hons)
திரு. தெய்வதவபாலன் Dip - in - Eng-

நிர்வாகி.

(சி/3630)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டரீதியான ஆயுதங்களுடன் ஒரு படை தயாராகின்றது!

## முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப் கூறுகிறார்

கொழும்பு, அக். 27

சட்டரீதியான ஆயுதங்களுடன் எமது பாரம்பரிய கலை கலாசார மரபுகளுக்கு ஏற்ப ஒரு படை தயாராகின்றது. இந்தப் படை முழுக்க முழுக்க ராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்படும்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம். எச். எம். அஷ்ரப் புத்தளம் நகர மண்டபத்தில் கடந்த சனியன்று நடந்த காங்கிரஸின் மாநில மாநாட்டில் கலந்து கொண்டு பேசுகையில் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

எமது போராட்டத்தின் வெற்றி அப்பாவித் தமிழர்களின் உயிர்களைப் பாதுகாப்பதில்தான் தங்கியுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை —

'கறுப்பு வெள்ளி' அன்று கொழும்பில் இடம்பெற்ற அசம்பாவிதங்கள் தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் அஷ்ரப் தெரிவித்திருப்பதாவது;

'கறுப்பு வெள்ளி' அன்று கொழும்பில் சில பகுதிகளில் இடம்பெற்ற வன்செயல்கள் பேரினவாத சக்திகளின் கையாள்கள் செய்த வேலையாகும்.

கொழும்பில் சில பகுதிகளில் தமிழ் மக்களைப் புண்படுத்தும் வகையில் முஸ்லிம் காங்கிரஸின் விரோத சக்திகளால் கடந்த வெள்ளி மேற்கொள்ளப்பட்ட நாசகார வேலைகள் குறித்து முஸ்லிம் காங்கிரஸ் மிகவும் கவலை கொண்டுள்ளது. (த-எ)

# முஸ்லிம் எம்.பிக்களை பதவிதுறக்க கோருவதால் பயன் ஏற்படாது

## பொலன்னறுவைச் சம்பவம் குறித்து ஹமீத்

கொழும்பு, அக். 27

பொலன்னறுவைப் படுகொலை தொடர்பாக அரசாங்கக் கட்சியைச் சேர்ந்த முஸ்லிம் எம். பிக்களையும், அமைச்சர்களையும் பதவி துறக்கும்படி கோருவது முஸ்லிம்களுக்கு பாதுகாப்பைத் தராது.

அமைச்சர் சாகுல் ஹமீது கடந்த சனியன்று மாத்தறையில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இப்படி கோருபவர்கள் வடக்கு-கிழக்கு பிரச்சினைக்குத் தீர்வு காண மாற்று யோசனைகளை முன்வைக்க முன்வரவேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார். (த-எ)

## 'கறுப்பு வெள்ளி' அசம்பாவிதங்கள்:

# விசாரணைக் குழு நியமிக்க கோரிக்கை

கொழும்பு, அக். 27

''கறுப்பு வெள்ளி'' தினத்தன்று கொழும்பு-மருதானை பள்ளிவாசல் அருகில் நடந்த அசம்பாவிதத்தின் பின்னணியை விசாரிக்க விசாரணைக் குழு ஒன்றை அரசு நியமிக்க வேண்டும்.

சுதந்திரக் கட்சியின் தொழிற் சங்கச் சம்மேளனத் தலைவரான ஜனாப் அலவி மௌலானா இக் கோரிக்கையை விடுத்திருக்கின்றார்.

ஜனாதிபதிக்கு இக் கோரிக்கையை அவர் அனுப்பி வைத்திருக்கிறார்.

இதே வேளை —

''கறுப்பு வெள்ளி'' அன்று மருதானை மற்றும் பண்டாரநாயக்கா மாவத்தை பகுதிகளில் இடம்பெற்ற வன்செயல்கள் தொடர்பாக பதினைந்து பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மருதானைப் பொலிஸார் எண்மரையும் வாழைத்தோட்டப் பொலிஸார் ஏழு பேரையும் கைது செய்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களில் சிலரை வன்செயல்களினால் பாதிக்கப்பட்டவர்கள் அடையாளங்காட்டியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (இ-எ)

# மழைநீர் தேங்குவதால் குடிசைகள் இடம் மாற்றம்

அராலி, அக். 27

காரைநகரில் இருந்து இடம்பெயர்ந்த மக்களுக்காக வழுக்கம்பரையில் அமைக்கப்பட்ட குடிசைகள் இடம் மாற்றப்படுகின்றன.

வழுக்கம்பரையில் அமைக்கப்பட்ட 40 குடிசைகளையும் வட்டு. கிழக்கு கிராமசேவை அலுவலர் பிரிவுக்கு மாற்ற யாழ். செயலக புனர்வாழ்வுப் பிரிவு 86 ஆயிரத்து 500 ரூபாவை ஒதுக்கி உள்ளது.

வழுக்கம்பரையில் இக் குடிசைகள் அமைக்கப்பட்ட பகுதிகளில் மழை நேரங்களில் தண்ணீர் தேங்கி நிற்பதே குடிசைகள் இடம் மாற்றப்படக் காரணம் ஆகும். (இ-12)

---

# மொழிபெயர்ப்பாளர்

சிங்களத்தில் பாண்டித்தியமும் சிங்களத்திலிருந்து தமிழுக்கு மொழி பெயர்க்கும் ஆற்றலும் பத்திரிகைத் துறையில் அனுபவமும், ஆர்வமும் உள்ளவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பூரணமான சுயவிவரங்களுடன் 02-11-1992க்கு முன்னர் எழுத்து மூலம் விண்ணப்பிக்கவும்.

பிரதம ஆசிரியர்,
உதயன்,
292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

(ச)

---

# அரசாங்க ஊழியருக்கு சம்பள உயர்வு

கொழும்பு, அக். 27

அரசாங்க சேவையில் உள்ள சகல ஊழியர்களுக்கும் அடுத்த ஜனவரியில் இருந்து உயர் சம்பள அதிகரிப்பு வழங்கப்படும் என்று அறிவிக்கப்படுகிறது.

இன்றைய வாழ்க்கைச் செலவைக் கருத்திற் கொண்டு இந்த சம்பள உயர்வு வழங்கப்படும் என்றும், இது ஓர் அடையாள சம்பள உயர்வாக இருக்காது என்றும் சிரேஷ்ட அரச வட்டாரம் தெரிவித்தது.

தனியார் துறையினரும் தமது ஊழியர்களுக்கு இச்சம்பள உயர்வைக் கொடுக்க நேரும் என்றும் அச்செய்தி தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சான்றிதழ் வழங்கும் வைபவம்

வண்ணார்பண்ணை, அக். 27

''யுனிசெப்''பின் அனுசரணையுடன் யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரியின் பணிமனையில் தொண்டர்களுக்காக நடத்தப்பட்ட முதலுதவிப் பயிற்சி வகுப்புகளில் சித்தியடைந்த மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கும் வைபவம் இன்று பிற்பகல் 2-30 மணிக்கு யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரியின் பணிமனையில் நடைபெறும். (த-162)

# அகதிகளுக்கு 58 குடிசைகள்

உடுவில், அக். 27

உடுவில் கிறிஸ்தவ இளைஞர் சங்கத்தினரால் இணுவில் ஆச்சிரமம் அகதி முகாமில் 58 குடிசைகள் அகதிகளுக்கென அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

உடுவில் மல்வம் முகாமில் உள்ளவர்களின் நலனுக்காக ஆறு மலசல கூடங்களும் அமைத்து கொடுக்கப்பட்டுள்ளன. (த-152)

# கிளிநொச்சி மக்கள் திரண்டு மாவீரர்களுக்கு அஞ்சலி

ஆனையிறவு உப்பள தொடர் காவல் அரண்கள் மீது கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற தாக்குதலின் போது வீரமரணமடைந்த 15 போராளிகளில் 7 பேரின் புகழுடல்களுக்கு கிளிநொச்சியில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

கிளிநொச்சி திருநகர் கிராம முன்னேற்ற மண்டபத்தில் வைக்கப்பட்டிருந்த இம்மாவீரர்களின் புகழுடல்களுக்கு பெருந் எண்ணிக்கையான மக்கள் கண்ணீர் மல்கத் தமது அஞ்சலியைச் செலுத்தினர்.

பின்னர் நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் விடுதலைப் புலிப் பிரமுகர் திரு. யோகரட்ணம் யோகி, கிளிநொச்சி மாவட்ட கலை, பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. செழியன் ஆகியோர் அஞ்சலி உரை நிகழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து மாவீரர்களின் புகழுடல்கள் பாண்ட் வாத்தியம் முழங்க அலங்கரிக்கப்பட்ட ஊர்திகளில் பிரதான வீதி வழியாக ஊர்வலமாக புதுமுறிப்பு மாவீரர் துயிலும் இல்லத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது.

வழிநெங்கும் மக்கள் வீடுகளின் முன் பூரண கும்பம், குத்துவிளக்கு வைத்து மலர்கள் தூவி அஞ்சலி செலுத்தினர். மக்களின் மனநிலையைப் பிரதிபலிப்பது போல் கிளிநொச்சி மாவட்டமே அன்று சோகமயமாகக் காட்சியளித்தது. (த-97)

# இரசாயனப் பொருள்கள் கொழும்பில் தேக்கம்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் பாவனைக்கென வெளிநாட்டிலிருந்து இறக்குமதிசெய்யப்பட்ட இரசாயனப் பொருள்களும், உபகரணங்களும் பழுதடையும் நிலையில் கொழும்பில் தேங்கியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

1990 ஆம் ஆண்டு ஜூன் மாதம் அளவில் இறக்குமதி செய்யப்பட்ட ஒரு கோடி ரூபா பெறுமதியான இப் பொருள்கள் கூட்டுப்படைத் தலைமையகத்தின் அனுமதி கிடைக்காததாலேயே கொழும்பிலுள்ள பல்கலைக் கழகக் களஞ்சியத்தில் தேங்கிக் கிடக்கின்றன.

இந்தப் பொருள்களை யாழ்ப்பாணம் எடுத்துவர கடந்த வாரமும் அனுமதி கோரப்பட்டதாகவும் —

ஆனால் கூட்டுப்படைத் தலைமையகம் அனுமதி மறுத்து விட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (த-3)

# மருதங்கேணிப் பகுதியில் விமானக்குண்டு வீச்சு

மருதங்கேணிப் பகுதியில் நேற்று முன்தினம் நான்கு ஸ்ரீலங்கா விமானப்படை விமானங்கள் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தின. மொத்தம் ஆறு குண்டுகள் வீசப்பட்டன.

இத்தாக்குதலினால் பல வீடுகளும் தனியார் வாகனங்கள் சிலவும் சேதமடைந்தன.

மருதங்கேணி வைத்திய சாலையில் இருந்து 100 யார் தூரத்தில் மூன்று குண்டுகள் வீதியில் வீழ்ந்து வெடித்தன. அந்த இடத்தில் பாரிய குழி ஒன்று ஏற்பட்டுள்ளது.

இப்பகுதி மக்கள் விமானங்களை வானில் கண்டவுடன் பாதுகாப்பான இடங்களை நாடியதால் உயிர்ச்சேதம் தவிர்க்கப்பட்டது.

தாளையடிப் பகுதியிலும் விமானங்கள் குண்டுகளை வீசின. இதில் பல வீடுகள் சேதமடைந்தன. (த-117)

# சிறுவர் சிகிச்சை நாள் மாற்றம்

தெல்லிப்பளை அரசினர் வைத்தியசாலையினால் கந்தரோடை சுப்பிரமணிய வாசிகசாலைக் கட்டடத்தில் புதன் கிழமை தோறும் நடத்தப்பட்டு வந்த சிறுவர்களுக்கான சிகிச்சைகள் வியாழக்கிழமைக்கு மாற்றப்பட்டுள்ளன.

அதே சமயம் மாவிட்டபுரத்தில் வியாழக்கிழமை தோறும் நடத்தப்பட்டு வந்த சிகிச்சைகள் வெள்ளிக்கிழமைக்கு மாற்றப்பட்டுள்ளன. (இ-159)

---

# 5 ஆவது பிறந்ததின வாழ்த்து

## ★ செல்வன் பிரியதர்சன் ★

(27 — 10 — 1992)

கலிஸ் யோகநாதன்- பிரேகுமாரி தம்பதிகளின் செல்வப்புதல்வன் பிரியதர்சன் தனது 5 ஆவது பிறந்த தினத்தை இன்று கனிஸில் கொண்டாடுகிறார்.

இவரை கனிஸ் அப்பா, அம்மா, கீர்த்திமாமா, மாமி, சிவாமாமா, கிஜநாதன் பெரியப்பா, கடோர குமார்மாமா, சிறுப்பிட்டி தாத்தா, அம்மம்மா, முத்துக்குமாரசாமி பெரியப்பா, பெரியம்மா, அண்ணன்மார், கணேசன் பெரியப்பா, பெரியம்மா, அக்காமார் அண்ணன், விசயன் மாமா, மாமி, மச்சான்மார், சத்தியம் மாமி, மச்சான்மார் புத்தூர் மாவி மாமா, மச்சான், மச்சான், நோர்வே மாமன்மார், மாமிமார், மச்சான்மார், மச்சான்மார், யாழ்ப்பாணம் அப்பம்மா, பெரியம்மா, அண்ணன்மார், அக்கா. வண்ணை காளியம்மாள் அருளால் பல்கலையும் கற்று, பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

(23034)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### மணமகள் தேவை

வயது 33, மகம், பாவம் 11, கண்டவிக் நிரந்தர பிரஜை, B Sc. கணக்காளனுக்கு வயது 28, உயரம் 5 அடி 4 அங். வரை. கணக்கியல் தராதர முள்ள, அழகிய, பண்பான குடும்ப மணமகள் வேண்டும்; 15 - 11 - 1992 க்கு முன் விண்ணப்பிக்கவும். இல. 456, C/o உதயன், யாழ்ப்பாணம். [23031]

### தங்குமிடம் தேவை

மருத்துவக் கல்லூரி மாணவர்கள் இருவர் தங்குவதற்கு வசதியான இரண்டு அறைகள் வேண்டும். உடன் தொடர்பு கொள்ளவும். இ. சங்கர், 430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். [சி-3728]

### G. C. E. O/L

கடந்த கால வினா-விடை புத்தகம் சகல பாடங்களுக்கும் குறைந்த விலையில் விற்பனையாகிறது அறிவகம் புத்தகசாலை, 374, வெலிங்டன் சந்திக்கு அருகாமையில், யாழ்ப்பாணம். (சி 3726)

### இடம்மாற்றம்

வேலணையூர் நடனமுருகன் வைத்திய நிலையம், யாழ். சத்திரச் சந்தி, கொட்டடி றோட்டிற்கு இடம் மாற்றப்பட்டு இயங்கி வருகின்றது. டாக்டர் கந்தையா நவரத்தினம். (5513)

### சோதிடம்

கல்வியில் சித்தியா? உத்தியோகம் கிடைக்குமா? வியாபாரம் விருத்தியாகுமா? விவாகம் நடைபெறுமா? ஆமாம் உங்கள் வினாக்களுக்கு உரிய பதில் உடனே கிடைக்கும்; சந்திக்கும் நேரம்: தினமும் காலை 8-30 முதல் 12-30 வரை. தினமும் பிற்பகல் 3 மணி முதல் 6 மணிவரை. த. சிவானந்தன் பிரபல சோதிடர், 384, கோவில் வீதி, நல்லூர் வடக்கு. [22994]

### தவறிவிட்டது

22 - 10 - 1992 இல் கல்வியங்காடு சந்தை சுற்றாடலில் கறுப்பு பிறேம் கொண்ட மூக்குக் கண்ணாடி தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். க. கண்ணுத்துரை (C. T B) இல. 171, கலைமகள் வீதி. நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம் [23028]

மருகமா, மூத்ததம்பி ஒழுங்கை, மானிப்பாய் என்பவருடைய அடையாளஅட்டை யாழ்ப்பாணம் பெரிய கடைப் பகுதியில் தவறிவிட்டது கண்டெடுப்பவர்கள் தயவு செய்து மேற்படி முகவரியில் ஒப்படைக்கவும் [5523]

### ENGLISH

"New Method English" for years 6 and 7. Just released Available at leading Book - Sellers Author K. Kurunathapillai, Retired Teacher. [23032]

### நல்லினத் தோடை

விவசாயத்தில் ஒட்டிய ஒரு வருடத்தில் பலன் தரும் திடகாத்திரமான சிறந்த இனத் தோடங்கன்றுகள் மற்றும் பதிவைத்த பாங்கொக் கொய்யா நாற்றுக்கள், எலுமிச்சை நாற்றுக்கள் விற்பனைக்கு உண்டு; முந்துவோருக்கு பூக்கள், காய்களுடனிய நாற்றுக்கள் வழங்கப்படும்; இடம்: துரைஐயா, நிலாவிரையடி, நவக்கிரி, புத்தூர். [5408]

### ஜாம் போத்தல்கள்

வெற்று ஜாம் போத்தல்களும் மூடிகளும் நிதான விலையில் பெற்றுக் கொள்ளப்படும். வேலவன் ஸ்ரோர்ஸ், 608/2, பருத்தித்துறை வீதி, நல்லூர் முன்பாக. [23026]

## ரூ. 15லட்சம் மீட்பு

கொழும்பு, அக். 27

சமீபத்தில் கொழும்பில் உள்ள இரண்டு நிறுவனங்களில் இருந்து கொள்ளையடிக்கப்பட்ட பணத்தில் பதினைந்து லட்சம் ரூபாவை குற்றத் தடுப்புப் பொலீஸார் மீட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (த-எ)

---

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை.

## மாணவர் வதிவிடம்

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் தங்கியிருப்பதற்கு வீடுகள் / அறைகள் தேவைப்படுகின்றன.

யாழ். பல்கலைக்கழகத்திற்கு அண்மையில் வீடுகள் உடையவர்கள் வீட்டினை / அறைகளை வாடகைக்கு கொடுக்க விரும்பினால் பல்கலைக்கழக நலச்சேவைகள் இணை உதவிப்பதிவாளரைச் சந்தித்து இதற்கெனவுள்ள படிவத்தைப் பெற்று. பூரணப்படுத்திய விண்ணப்பங்களை 03 - 11 - 1992 ற்கு முன்னர் அவ்வலுவலகத்திற்கு கிடைக்கச் செய்யவும்.

– பதிவாளர்.

[சி 3629]

---

# LONDON EXAMS

MAY / JUNE 1993

New Classes are Commencing

| | | |
|---|---|---|
| C. I. M. A. | Stage I | 14 - 11 - 1992 |
| A. A. T. | Inter | 01 - 11 - 1992 |
| I. A. B. | Foundation | 01 - 11 - 1992 |
| | Inter | 01 - 11 - 1992 |
| | Final | 05 - 12 - 1992 |
| BASIC | | 11 - 11 - 1992 |
| SHORT-HAND & TYPING | | 02 - 11 - 1992 |

★ Student registration handled by us.
★ Fees accepted in parts.

## SCHOOL OF BUSINESS ADMINISTRATION


16, 3rd Cross Street, Jaffna.

[சி- 3729]

---

## நெஞ்சை விட்டகலாத 8ஆம் ஆண்டு நினைவு நாள்

| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 11 | 25 |
| — | — |
| 04 | 10 |
| — | — |
| 1972 | 1984 |



## செல்வி நிமாலினி வீரசிங்கம்

(பாப்பா)

திதி: 27 - 10 - 1992

எங்கள் அன்புப் பாப்பா!
பிரிவுத் துயர் தாழவில்லை
பிரிந்து சென்று விட்டாயம்மா!
எரியும் தணலாய் ஏக்கங்கள்
எங்கள் நினைவின் தூக்கங்கள்!
உன் சிரிப்பும் உன் பேச்சும்
உறக்கத்திலும் எம்முன்னே தோன்றிட,
எங்கு சென்றாய் பாப்பா!
எங்கள் இதயக் கோட்டையிலே
என்றும் இருப்பாய் நினைவாக;

என்றும் உம் ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டி நிற்கும்;

அன்புள்ள:
அப்பா, அம்மா,
பாசமுள்ள உடன் பிறப்புகள்,
லெனின்ராஜா, பாமினி, திவராசா,
தயாளினி மற்றும் உறவினர்கள்.

34/1, இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம். [23030]

---

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

### சண்முகம் வேலாயுதபிள்ளை

[இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர்]

ஆண்டவன் படைப்பில்: 24 — 05 — 1927
அந்நியன் அழிப்பில்: 27 — 10 — 1987

ஐயா! ஆண்டுகள் ஐந்து ஓடி மறைந்தாலென்ன, எங்கள் உள்ளம் என்றும் கோயிலில் தீபமாக வீற்றிருக்கும். உங்கள் எண்ணம் என்றும் ஆறாது: கருணையின் கடலே! பாசத்தின் தந்தையே! அந்நியரால் அநியாயமாக உயிர் பறிக்கப்பட்ட உங்களை எண்ணி உள்ளம் உருகுது ஐயா!

தங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனை இறைஞ்சுகின்றோம்;

பிரிவால் துயருறும்:
மனைவி, மைத்துனர், பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்.

கொக்குவில் மேற்கு,
கொக்குவில்; [22947]

---

## 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 05 | 03 |
| — | — |
| 02 | 11 |
| — | — |
| 1918 | 1986 |



## அமரர் நாகமுத்து சிவப்பிரகாசம்

[அம்மான் மில் உரிமையாளர், சண்டிலிப்பாய்]

திதி: 27—10—1992

ஆண்டுகள் ஆறு சென்றாலும்
ஆறுமோ எமது துயரம்;

மனைவி, சகோதரர்கள்,
மச்சான்மார், மருமக்கள்.

சிரணி,
சண்டிலிப்பாய். (23033)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

## உதயன்

### நல்முடிவு வருமா?

இனப்பிரச்சினைக்கு வருட இறுதிக்குள் நல்ல தீர்வொன்றைக் காண முடியும் என்று நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் தலைமைப்பீடம் தெரிவித்திருப்பதாகச் செய்திகள் கூறுகின்றன!

கடந்த வருடம் ஆகஸ்ட் மாதத்தில் உருவாக்கப்பட்ட தெரிவுக்குழு கடந்த பதினைந்து மாதங்களாக ஆமை வேகத்திலேயே நகர்ந்து வருகிறது. அது தீர்வுக்கென வகுத்த ஆலோசனைகள், திட்டங்கள் என்பன தமிழர்களின் அபிலாஷைகளுக்கு அருகில் தானும் வரவில்லை; கிட்டவும் நெருங்குவதாக இல்லை.

கொழும்பில் இயங்கும் தமிழ்க் குழுக்கள் கூட அந்தத் திட்டங்களை வெட்டு ஒன்று துண்டு இரண்டாக நிராகரித்துவிட்டன. தெரிவுக் குழுவின் தலைவர் மங்கள முனசிங்கா சமர்ப்பித்த யோசனைக்கும் அதே கதியே நேர்ந்தது.

அவ்வாறிருக்கத் தெரிவுக் குழு எதனை ஆதாரமாகக் கொண்டு இன்னும் இரண்டு மாதங்களில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என்று நம்பிக்கை தெரிவித்திருக்கிறது? மந்திரத்தால் மாங்காய் வீழ்த்தும் வல்லமை உண்டென்ற நினைப்போ?

நாற்பத்துநான்கு வருடங்களாகத் தீர்க்கமுடியாத இப்பிரச்சினையை—முன்னர் எப்போதும் இல்லாதவாறு இப்போது மிகச் சிக்கலாகிவிட்ட இனப்பிரச்சினையை—இரண்டு மாதங்களுக்குள் தீர்க்கும் சாத்திய நிலை உருவாக இயலுமா?

தமிழர்களின் தனியரசு நிறுவும் நீண்டகால இலட்சியத்தை அவர்கள் அடைய வழி செய்யும் திட்டம் ஒன்றின் மூலமே இனப்பிரச்சினைக்கு தீர்வு சாத்தியமாகும்.

அத்தகைய ஒரு நிலையை எய்துவதற்கான ஒரு சிறிய புள்ளி தானும் வெளிப்படையாகக் கண்ணுக்குப் புலப்படவில்லை. தமிழர்களது தேவை ஒரு துருவமாகவும், சிங்களவர் வழங்க விரும்புவது இன்னொரு துருவமாகவும் இருக்கும்போது அந்த இடைவெளியைக் குறைத்து, இரு சாராரையும் நெருக்க மடையச் செய்வதற்கு இரண்டு மாதங்கள் போதுமா?

அது சாத்தியமாவதற்கு சிங்களவர் தரப்பில் பெருமளவில் விட்டுக் கொடுப்பதற்கான தாராள மனம் வேண்டும். அத்தகைய தாராள மனம் சிங்களத் தலைவர்களிடம் திடீரெனப் பிறந்தால் மட்டுமே இடைவெளியைக் குறுகிய காலத்தில் குறைக்க முடியும்.

தமிழர்களின் பிறப்புரிமைகளை, வாழ்வுரிமைகளை, அடிப்படை உரிமைகளை வழங்கி அவர்களே தமது தலைவிதியையும், தமது தாயகத்தின் வளர்ச்சியையும் நிர்ணயிக்கவும் செயற்படுத்தவும் தடையாக நில்லாமல் சிங்களவர் தாராளமனம் கொண்டால் — மனத்திருப்பம் ஏற்பட்டால் — இனபிரச்சினையைத் தீர்ப்பது கடினமல்ல.

அத்தகைய ஒரு மனத்திருப்பம் சிங்கள அரசியல்வாதிகளுக்கு ஏற்பட்டுள்ளதா? அப்படியாயின் அது வெளியில் புலப்படாத தாராள மனதா? இறுதி நேரத்தில் தான் காட்சிக்கு வருமா?

அகதி முகாம்களில்

# சுகாதாரச் சீர்கேடுகளால் நோய்கள் பரவும் ஆபத்து

வலிகாமம் மேற்கு சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் உள்ள அகதிமுகாம்களில், சுகாதார சீர்கேடுகள் காரணமாக பலவித நோய்கள் தீவிரமாக பரவி வருகின்றன.

வயிற்றோட்டம், கண் நோய், நெருப்புக்காய்ச்சல், பாரிசவாதம், சின்னமுத்து போன்ற பல்வேறு நோய்கள் இங்கு பரவத் தொடங்கியுள்ளன.

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தினரால் (ரி. ஆர். ஆர், ஓ) அகதிமுகாம்களுக்கான மலசலகூட வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருப்பினும், போதியளவு மலகூடங்கள் இன்மையால் தொற்று நோய்க்கிருமிகள் பரவும் நிலை தோன்றியுள்ளது.

அகதி முகாம்களில் இலையான் மற்றும் நுளம்புகளின் தொல்லையால் அங்கு தங்கியுள்ள மக்கள் பெரிதும் கஷ்டமுறுகின்றனர். இலையான், நுளம்புகளை ஒழிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படாமையால் அவற்றால் தொற்று நோய்கள் பரவும் ஆபத்தும் ஏற்பட்டுள்ளது.

மேலும் அகதிகளுக்கென அமைக்கப்பட்டுள்ள குடிசைகள் அமைந்துள்ள காணிகள் பள்ளமானவையாகையால் மழைநீர் தேங்கி நிற்கக் கூடிய வாய்ப்பும் காணப்படுகிறது. பற்றைகளை அழித்து அமைக்கப்பட்ட குடிசைகளில் விஷப் பாம்புகள் நடைபெடுப்பதுடன் தெரு நாய்களின் தொல்லையும் இம் முகாம்களில் காணப்படுகின்றது. [த-152]

## வயற்காவலில் ஈடுபட்டிருந்த சிங்களவர் சுட்டுக் கொலை

கொழும்பு, அக் 27

கடந்த வெள்ளியன்று இரவு அரலஹங்கில என்ற இடத்தில் அவதலாவ கிராமத்துக்குள் புகுந்த இனந்தெரியாத கோஷ்டி ஒன்று 45வயதான டி. ஆர். அப்புஹாமி என்பவரைச் சுட்டுக் கொன்றது என்றும்—

டி. எம். சரத் திஸாநாயக்கா என்பவரைக் கடத்திச் சென்றதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்கள் இருவரும் தமது வயல்களில் காவலில் ஈடுபட்டிருந்த போதே அவர்களுடன் இனந்தெரியாத கோஷ்டியைச் சேர்ந்தவர்கள் மோதிக் கொண்டனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அக் கோஷ்டியினர் காட்டுக்குள் தப்பிச் சென்ற போது கிராமவாசிகளின் இரண்டு சைக்கிள்களையும் எடுத்துச் சென்றனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. [த-எ]

## ஸ்ரீலங்கா மக்கள் காங்கிரஸ்; புதிய கட்சி ஆரம்பம்

### சபாநாயகர் பிரதம அதிதி

கொழும்பு, அக். 27

ஸ்ரீலங்கா மக்கள் காங்கிரஸ் என்ற பெயரில் புதிய அரசியல் கட்சி ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இக் கட்சியின் அங்குரார்ப்பண வைபவம் கொழும்பு புறக்கோட்டையில் உள்ள பழைய நகரமண்டபத்தில் இடம் பெற்றது.

பிரதம அதிதியாக சபாநாயகர் எம். எச். முஹம்மது கலந்து கொண்டார்.

எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா, வர்த்தக மற்றும் வாணிப அமைச்சர் ஏ. ஆர். மன்சூர், ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணித் தலைவர்களில் ஒருவரான அத்துலத் முதலி, டாக்டர் பதியுதீன் மஹ்மூத், தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பி. மாவை சேனாதிராஜா ஆகியோரின் வாழ்த்துச் செய்திகளும் கூட்டத்தில் வாசிக்கப்பட்டன.

## இந்தியத் தரைப்படைக்கு கடும் நிதிப்பற்றாக்குறை

புதுடில்லி, அக். 27

இந்திய இராணுவத்தின் தரைப்படை கடுமையான நிதிப்பற்றாக்குறையை எதிர்நோக்கியிருக்கிறது என்று அறிவிக்கப்படுகின்றது.

இந்தப் பற்றாக்குறையை உடனடியாக நிவர்த்தி செய்ய இந்திய இராணுவத்துக்கு இந்தியப் பணத்தில் சுமார் ஆயிரம் கோடி ரூபா தேவை என்று இந்திய இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்திய பத்திரிகை 'பயனியர்' இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.

இந்தியா தனது இராணுவத்துக்கு இவ்வருடம் சுமார் 20 ஆயிரம் கோடி ரூபா செலவிடுவது குறிப்பிடத்தக்கது.

## ஆங்கில ஆசிரியர் தட்டுப்பாடு நீக்க அமைச்சு முயற்சி

நாட்டில் தற்போது நிலவி வரும் ஆங்கில ஆசிரியர் தட்டுப்பாட்டை நீக்க முறையான திட்டம் ஒன்று செயற்படுத்தப்படுவதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டில் 3 ஆயிரம் பேருக்கு ஆங்கில ஆசிரிய நியமனங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

புதிய திட்டத்தின் கீழ் விசேடமாகக் கஷ்டப் பிரதேசங்களில் ஆங்கில ஆசிரியர்களுக்கான பற்றாக்குறை நீக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நாடு முழுவதிலும் சுமார் 23 ஆயிரம் ஆங்கில ஆசிரியர்கள் தேவைப்படுகிறார்கள். இப்போது 1,500 பேருக்கு பற்றாக்குறை நிலவுகிறது. [இ-10]

# நகரப் பாடசாலைகளை நாடும் நிலைமாற வேண்டும்

### கல்விப் பணிப்பாளர் பேச்சு

உடுவில், அக். 27

மாணவர்கள் நகர்ப்புறப் பாடசாலைகளை நாடும் நிலை மாறவேண்டும். அவர்கள் தமது கிராமங்களிலேயே உயர் கல்வியைப் பெற வசதி செய்யவேண்டும் என்ற நோக்கத்துடனேயே ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும் ஒரு உயர்தரக் கல்லூரி அமைக்கப்பட்டு வருகின்றது.

இணுவில் அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை, இணுவில் சைவ மகாஜனா மகாவித்தியாலயம் ஆகிய இரு பாடசாலைகளும் இணுவில் மத்திய கல்லூரியாக ஒன்றிணைக்கப்பட்டு பெயர் சூட்டும் வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போது வடமாநிலக் கல்விப்பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் இவ்வாறு தெரிவித்தார்.

இணுவில் அமெரிக்கன் மிஷன் பாடசாலையில் மத்திய கல்லூரி என்ற பெயரை முதலில் திரைநீக்கம் செய்து வைத்த கல்விப் பணிப்பாளர் பின்னர் இணுவில் சைவ மகாஜனா மகாவித்தியாலயத்திலும் மத்திய கல்லூரி என்ற பெயர்ப் பலகையைத் திறந்து வைத்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:—

இரு பாடசாலைகளும் இணைந்து ஒரு கல்லூரியாக இயங்குவது இக் கிராம மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு ஊக்கம் அழிப்பதாகும் நகர்புற பாடசாலைகளின் தரத்திற்கு இக்கல்லூரி வளர்ச்சியடைய என்னாலான சகல முயற்சிகளையும் வழங்குவேன் என்றார்.

நிகழ்ச்சியில் தமிழீழத் தேசியக் கொடியை விடுதலைப் புலிகள் பிரமுகர் திரு. வெ. இளங்குமரனும், பாடசாலைக் கொடியை மருதனார் மடம் உதவிக் கல்விப்பணிப்பாளர் திரு. சு. இரத்தினராசாவும் ஏற்றி வைத்தனர். [த-152]

## மன்னாரில் மீண்டும் இயங்கும் பாடசாலைகள்

மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த கரிசல் றோமன் கத்தோலிக்கத் தமிழ்க் கலவன் பாடசாலை, எருக்கலம்பிட்டி கிழக்கு அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலை ஆகியவை மீண்டும் 21-09-92ஆம் திகதி தொடக்கம் இயங்க ஆரம்பித்துள்ளன.

ஏற்கனவே இப்பாடசாலைகளில் கடமையாற்றி, தற்போது இடம் பெயர்ந்துள்ள ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் உடனடியாக இப்பாடசாலைகளில் கடமையாற்ற திரும்பும்படி வடக்கு-கிழக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் திரு. தியாகராஜா தெரிவித்திருக்கிறார். [த-எ]

## யாழ். பல்கலைக்கழக விரிவுரைகள்

யாழ்ப்பாணம், அக். 27

யாழ். பல்கலைக்கழகத்துக்கு 91/92 கல்வி ஆண்டுக்கு தெரிவு செய்யப்பட்ட புதிய மாணவர்களுக்கான விரிவுரைகள் ஆரம்பிக்கும் திகதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

கலைப்பீட, விஞ்ஞானபீட விரிவுரைகள் அடுத்த மாதம் 2ஆம் திகதியும்—

வைத்தியபீட விரிவுரைகள் இம் மாதம் 28ஆம் திகதியும்— ஆரம்பிக்கப்படவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

விவசாயபீட விரிவுரைகள் அடுத்த ஜனவரியில் ஆரம்பிக்கப்படவிருக்கிறது. [த-3]

## பங்கீட்டு அட்டைக்கு மண்எண்ணெய்

யாழ்ப்பாணம், அக். 27

யாழ்ப்பாணம் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் தனது எல்லைக்கு உட்பட்ட மக்களுக்கு இன்று முதல் பங்கீட்டு அட்டைக்கு 15 ரூபாப்படி மண்ணெண்ணெய் விநியோகிக்க உள்ளது.

அதேசமயம் பங்கீட்டு அட்டைக்கு கிலோ 28 ரூபாவுக்கு சீனி விநியோகிக்கவும் ஏற்பாடாகி உள்ளது.

* * *

ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கம் இன்று முதல் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் உள்ள பி எஸ். சேர்விஸ் நிலையத்தில் பங்கீட்டு அட்டைக்கு லீற்றர் 38 ரூபாய்ப்படி 2 லீற்றர் மண்ணெண்ணெய் வழங்க உள்ளது.

## ஜி. சீ. ஈ. சாதாரண முன்னோடிப் பரீட்சை

ஜி. சீ. ஈ. சாதாரண முன்னோடிப் பரீட்சையில், நடனம், சங்கீதம் ஆகிய பாடங்களுக்கான செயல்முறைப் பரீட்சைக்கு நியமிக்கப்பட்டுள்ள பிரதம / உதவி பரீட்சகர்களை நாளை புதன்கிழமை காலை 10 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் சமுகமளிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

# இராணுவக் கட்டுப்பாட்டு பிரதேச மாணவருக்கே இலவசச் சீருடை!

யாழ்ப்பாணம், அக். 27

அரசாங்கத்தின் இலவசச் சீருடை தமிழ்ப் பகுதிகளில் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் வாழும் மாணவர்களுக்கு மட்டுமே வழங்கப்படும்.

இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளில் உள்ள பாடசாலைகளைச் சேர்ந்த மாணவருக்கு இலவசச் சீருடை வழங்கப்படமாட்டாது.

அரசாங்கத்தின் இந்த முடிவு கொழும்பிலிருந்து நேற்று யாழ். செயலகத்துக்கு அறிவிக்கப்பட்டது.

பாடசாலை மாணவருக்கு இலவசப் பாடப்புத்தகங்கள் வழங்குவது போல இலவசச் சீருடைகளை வழங்குவதென்று கல்வி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி முடிவு செய்திருந்தார்.

தென்னிலங்கைப் பாடசாலைகளில் இலவசச் சீருடை வழங்கும் திட்டம் எதிர்வரும் ஜனவரி தொடக்கம் நடைமுறைக்கு வருகிறது. இலவசச் சீருடை வழங்குதல் ஏற்கனவே வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டுவிட்டது. [அ-3]

## பாஷையூர் விளையாட்டு கழகத்தினரல்ல

யாழ்ப்பாணம், அக். 27

''உதைபந்தாட்ட வீரர்கள் வீதிகளில் அடிதடி ரகளை'' என்ற தலைப்பில் கடந்த சனியன்று வெளியான உதயன் முதற்பக்கச்செய்தியில் சம்பந்தப்பட்ட மோதலில் ஈடுபட்டவர்கள் பாஷையூர், நாவாந்துறை பகுதிகளைச் சேர்ந்த இரு பிரபல விளையாட்டுக் கழகங்களின் ஆதரவாளர்கள் என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

ஆனால் குருநகர், நாவாந்துறைப் பகுதிகளைச் சேர்ந்த இரு பிரபல விளையாட்டுக் கழகங்களின் ஆதரவாளர்களே மோதலில் ஈடுபட்டனர்.

இச்செய்தியால் பாஷையூர் பகுதி விளையாட்டுக் கழகத்தினருக்கு ஏற்பட்ட வேதனைக்கு வருந்துகிறோம். [ஆ-உ]

## குமாரி...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

விருக்கின்றனர்.

அதேவேளை—

பருத்தித்துறையில் தற்சமயம் பொருள்களை இறக்கிக் கொண்டிருக்கும் 'குமணா' கப்பல் எதிர்வரும் வெள்ளிக்கிழமை அரச ஊழியர்களுடன் திருகோணமலை நோக்கிச் செல்லும் என்றும்-

கொழும்பில் இருந்து வரும் நோயாளர்களுடன் 'குமண' மீண்டும் ஞாயிற்றுக்கிழமை பருத்தித்துறைக்கு வரும் என்றும்-

மீண்டும் கொழும்பு செல்லும் நோயாளர்களுடன் 'குமண' அன்றே கொழும்பு நோக்கிச் செல்லும் என்றும்- தெரிவிக்கப்பட்டது.

## சர்வதேச...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் வைத்தியப் பகுதி பொறுப்பாளர் திரு. லிசிவொற்றும் இவருடன் வருகிறார்.

யாழ்ப்பாணத்தில் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அலுவலகம் திறக்கப்பட்ட பின்னர் ஜெனிவா தலைமையகத்தில் இருந்து அதிகாரி ஒருவர் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்வது இதுவே முதல் தடவையாகும்.

## பல்கலை...

[1 ஆம் பக்கத்தொடர்ச்சி]

களிடம் இருந்து புகார்கள் கிடைத்துள்ளதாகவும்—

ஆனால் ''ராகிங்'' தொல்லை கொடுத்த மாணவர்களை இனங்காணக்கூடிய விதத்தில் அந்த முறைப்பாடுகள் அமையவில்லை என்றும்— பல்கலைக்கழக வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

''ராகிங்''கில் ஈடுபடும் மாணவர்கள் குறித்துச் சரியான தகவல்களைப் பெற்றோர் மற்றும் காவல்துறையினர் தரும் பட்சத்தில் சம்பந்தப்பட்டோர் குற்றவாளிகளாகக் காணப்பட்டால் அவர்கள் வகுப்புகளிலிருந்து ஒரு வருடத்துக்கு இடைநிறுத்தி வைக்கப்படுவர் — என்றும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

குற்றவாளிகளைத் தண்டித்து ''ராகிங்'' தொல்லையை நீக்கப் பெற்றோர்கள், பல்கலைக்கழகத்திலும் மாணவர்கள் உதவவேண்டும் என்றும் பல்கலைக்கழக வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. [அ-3]

## கைப்பற்றப்பட்ட ஆயுதங்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

| | | |
|---|---|---|
| ★ தொலைத் தொடர்பு சாதன மின்கலங்கள் | — | 02 |
| ★ தலைக் கவசம் | — | 02 |
| ★ ராணுவ, சிவில் சப்பாத்து | — | 47 |
| ★ ஏ. கே: ரவைக்கூடு தாங்கி | — | 08 |
| ★ ராணுவ உருமறைப்பு சீருடைகள் | — | 30சோடி |
| ★ தொப்பிகள் | — | 14 |
| ★ தபால் பைகள் | — | 09 |
| ★ தண்ணீர் தாங்கிகள் | — | 13 |
| ★ தண்ணீர் தாங்கி அணிகள் | — | 12 |
| ★ உணவுப் பெட்டிகள் | — | 11 |
| ★ ராணுவ பைகள் | — | 08 |
| ★ ராணுவ பட்டிகள் | — | 18 |
| ★ ஒலிப்பதிவு கருவி | — | 01 |

[இ-3]

## வயிற்றோட்ட...

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களால் மூடி வைத்து ஈக்களில் இருந்து பாதுகாப்பாக வையுங்கள்.

★ திறந்து வைத்து விற்பனையாகும் உணவுகளை வாங்கி உண்ணாதீர்கள்.

★ கீரை போன்ற இலை வகைகளை நன்கு சுத்தம் செய்த பின்னரே உண்ணுங்கள். வேக வைத்து உண்ணுதல் நன்று.

★ பழங்களை நன்கு கழுவி சுத்தம் செய்த பின்பே உண்ணுங்கள்.

★ வயிற்றோட்டம் எனச் சந்தேகிக்கும்போது போதிய அளவு நீர்த்தன்மையான பானங்களை அருந்தக் கொடுங்கள்.

★ ஜீவனி என்கின்ற பைக்கெற்றைப் பெற்று ஒரு லீட்டர் கொதித்தாறிய நீரில் கரைத்து உரிய முறைப்படி பருகக் கொடுத்தல், நீரிழப்பினைத் தடுக்கும் நல்ல நடவடிக்கையாகும்.

★ சூழல் சுகாதாரம், தன் சொந்தச் சுகாதாரம் ஆகியவற்றைக் கண்டிப்பாக கடைப்பிடியுங்கள்.

★ வைத்திய ஆலோசனையை, சிகிச்சையை நாடுங்கள்.

வயிற்றோட்டம் பற்றிய தகவல்களை உங்கள் பகுதி குடும்பநல சேவையாளருக்கு உடன் அறிவிப்பதன் மூலம் போதிய தகவல்களையும் பாதுகாப்பான நடவடிக்கைகளையும் நீங்கள் பெறமுடியும். [இ-5]

## மரண அறிவித்தல்

### திருமதி தம்பிராசா ரத்தினம்மா
(அம்மான் தம்பிராசாவின் மனைவி)

திருமதி தம்பிராசா ரத்தினம்மா காலமானார்; அன்னார் காலஞ்சென்ற திரு. தம்பிராசாவின் அன்பு மனைவியும், திரு. ரட்னேஸ்வரன் (பிரதான தபால் கந்தோர் ஊழியர், யாழ்ப்பாணம்), திருமதி ஞானசேகரம்-சோமேஸ்வரி (ரஞ்சி), செல்வி நந்தினி, செல்வி தமிழ்வளர்செல்வி ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு. ஞானசேகரனின் (சேகர்) அன்பு மாமியாரும், ரூபாஜினி, சுவேஜினி, பவித்திரா, சாரங்கன் ஆகியோரின் அன்பு பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் (27-10-92) இன்று அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 2 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
திரு. ரட்னேஸ்வரன்
(மகன்)

78/6. கஸ்தூரியார் வீதி,
கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம்

(23039)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 392/2, இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 27-10-92 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.

## 7 மாவீரர்களுக்கு அஞ்சலி

பூநகரி - பள்ளிக்குடா இராணுவ மினிமுகாம் தகர்ப்பின் போது வீரமரணமடைந்த 7 போராளிகளின் 31 ஆம் நாள் நினைவுதினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

இந்த மாவீரர்களின் திருவுருவப் படங்கள் நேற்று காலை நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்கு முன்பாக திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டன.

லெப். கேணல் சுபன், லெப். தமிழேந்திரன், லெப். அறிவுடையான் 2 ஆம் லெப். பன்னீர்ச் செல்வன், 2 ஆம் லெப். சுருளி, வீரவேங்கை வெடியரசன், வீரவேங்கை இயல்வாணன் ஆகியோரே இந்த ஏழு மாவீரர்களும் ஆவார்.

முதலில் கலை, பண்பாட்டு கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரையும், கல்விக் கழக பொறுப்பாளர் இளங்குமரனும் ஈகை சுடரை ஏற்றி வைத்தனர்.

இவ்வைபவத்தில் யாழ். மாவட்ட தளபதி திரு. செல்வராஜா, மன்னார் தொடர்பகப் பொறுப்பாளர் திரு. பரஞ்சோதி, மாவீரர் பணிமனை தொடர்பகப் பொறுப்பாளர் திரு. பொன்தியாகம், அரசியல் மயிற்கை கல்லூரிப் பொறுப்பாளர் திரு. மூர்த்தி, திரு. சலீம், மகளிர் முன்னணி பொறுப்பாளர் செல்வி ஜெயா, யாழ். மாவட்ட மகளிர் முன்னணிப் பொறுப்பாளர் ஆர்த்தி ஆகியோர் மாவீரர்களின் திருவுருவப் படங்களை திரை நீக்கம் செய்துவைத்தனர்.

லெப். தமிழேஸ்வரனின் தந்தை திரு. கார்த்திகேசு மாவீரர்களுக்கு மலர்மாலை அணிவித்தார்.

இந்த வைபவத்தில் பெருந்திரளான பாடசாலை மாணவர்கள் கலந்துகொண்டு மாவீரர்களுக்கு மலர்தூவி அஞ்சலி செலுத்தினார்கள். [இ-17]

## நோர்வே செஞ்சிலுவை அதிகாரியின் விஜயம் இன்றே இடம் பெறுகிறது

யாழ்ப்பாணம், அக். 27

நிவாரணத்துக்குப் பொறுப்பான நோர்வே செஞ்சிலுவைச் சங்கத்தின் அதிகாரி திரு. இவான்ஸ் இன்று யாழ்ப்பாணம் வருகிறார்.

ஏற்கனவே அறிவிக்கப்பட்டபடி நேற்று அவரது யாழ் விஜயம் இடம்பெறவில்லை.

பலாலி வந்து சேரும் இவர் இன்று காலை 'குமண' கப்பல் மூலம் பருத்தித்துறையை வந்தடைவார்.

இலங்கை செஞ்சிலுவைச் சங்க அதிகாரி ஒருவரும் அவருடன் வருகிறார்.

## இலங்கையின் சனத்தொகை தினமும் 611 ஆல் அதிகரிப்பு

கொழும்பு, அக். 27

இலங்கையின் மக்கள் தொகை தினமும் 611 ஆல் அதிகரித்து வருகிறது. இந்த வீதத்தில் சனத்தொகை பெருக்கம் இருக்குமானால் ஒவ்வொரு ஆண்டும் நாட்டின் சனத்தொகை 2 லட்சத்து 24 ஆயிரத்தினால் அதிகரிக்கும், 2010 ஆம் ஆண்டளவில் நாட்டு சனத்தொகையில் 20 லட்சம் அதிகரிப்பு காணப்படும்.

கொழும்புப் பல்கலைக் கழகத்தின் சமுதாய நிலைப் புள்ளி விவர ஆராய்ச்சிப் பிரிவுப் பணிப்பாளர் டாக்டர் சித்திசேன இத் தகவலை வெளியிட்டார்.

## பெற்றோல் கான் வெடித்து மரணம்

தென்மராட்சி, அக். 27

விளக்குடன் பெற்றோல் கான் எடுத்தவர் பெற்றோல் கான் வெடித்து மரணமான சம்பவம் நேற்று மீசாலை புத்தூர் சந்தியில் இடம் பெற்றது.

எஸ். வீரசிங்கம் (வயது 52) என்பவரே இறந்தவர் ஆவார். (இ-117)

## மன்னாரில்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

நேற்று அதிகாலை பீரங்கிகள், சிறிய ஆயுதங்கள், ரொக்கட், எறி குண்டுகள் மூலம் புலிகள் நடத்திய தாக்குதலில் 5 படையினர் கொல்லப்பட்டனர் என்றும் இரண்டு படையினர் படுகாயம் அடைந்தனர் என்றும் கூட்டுப்படைகள் தலைமையகப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (இ-எ-3)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், அக். 27

யாழ். பல்கலைக் கழக கலைப்பீட மாணவர்களுக்கான கலந்துரையாடல் இன்று காலை 11 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறவிருக்கிறது. (இ-162)

## புற்று நோய் அறிவுப் போட்டி

யாழ். மாநகராட்சி மன்ற சுகாதாரப் பிரிவும் வடமாநில புற்றுநோய்த் தடைச் சங்கமும் இணைந்து நடத்தும் பாடசாலை மாணவர்களுக்கான புற்றுநோய் பற்றிய அறிவுப் போட்டி நவம்பர் 15 ஆம் திகதி நடைபெற உள்ளது.

இதற்கான விண்ணப்ப முடிவு திகதி நவம்பர் 8 ஆம் திகதி ஆகும்.

கீழ்ப்பிரிவு, மத்திய பிரிவு, மேற்பிரிவு என மூன்று பிரிவுகளில் போட்டி நடைபெறும்.

இப்போட்டி சம்பந்தமான நிபந்தனைகளையும், விபரங்களையும் யாழ். மாநகராட்சி மன்ற சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் அறிந்து கொள்ளலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ)

## விடுதலைப் புலிகளிடம்...

(1 ஆம் பக்கம் தொடர்ச்சி)

என இராணுவ வட்டாரங்கள் சுட்டிக் காட்டின என்றும் — பிரித்தானிய வானொலி சிங்களச்சேவையில் தெரிவிக்கப்பட்டது. புலிகளிடமும் ராடார் கருவிகள் உண்டு. அவற்றின் உதவியுடன் நீர்மூழ்கிக் கப்பலை உபயோகித்து கடற்படையினரின் ராடார் கப்பலை நாசமாக்க இடமுண்டு என இராணுவத்தினர் தெரிவித்தனர் என்றும் — அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org